1979 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, " தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டாவது (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1979 நிறைவேற்றப் பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறை வேற்றப்பெற்றது.

(ஔ) கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, " தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கி (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, " தமிழ் நாடு 1979-ம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1979) நிறைவேற்றப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறை வேற்றப்பெற்றது.

(க) வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (ஆய்வுக்குழு திருத்தி அமைத்தவாறு), 197T.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1978 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன் வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/78) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
என்று மொழிகிறேன்.

---

* 1979, எபரல், 20-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.